## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.396/2015**

திரு. நாகவிஜய் (D.W –4) **09.01.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து இரண்டு பட்டியலிட்ட சொத்தாக தாவா சொத்துவிவரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. முதல் பட்டியலிட்ட சொத்து க.ச.எண். 385/3 ஈ 2.30 ஏக்கர், இரண்டாவது பட்டியலிட்ட சொத்து 386/1 3.80 ஏக்கர் என்றால் சரி. முதல் பட்டியலிட்ட சொத்தை முதல் வாதிக்கும், 2 வது பட்டியலிட்ட செத்தை 2 வது வாதிக்கும் ஜெயமணி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரி. வா.சா.ஆ– 1 மற்றும் 2 ன் படி கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரி. முருகானத்தத்டம் இருந்து சொத்துக்களை நான் கிரையம் பெற்றதாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரி. வா.சா.ஆ– 9 ன் படி 28.09.2006 ம் தேதி கிரையம் பெற்றேன் என்றால் ஆமாம். முருகானதத்திற்கு 1, 2 வாதிகள் நேரடியாக சொத்துக்களை கையொப்பம் செய்து விற்பனை செய்யவில்லை என்றால் ஆமாம்.

2. வா.சா.ஆ– 7 மற்றும் 8 ன் படி பொது அதிகார முகவர் சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தாக ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பொது அதிகார ஆவணத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். வா.சா.ஆ– 3 மற்றும் 4 ல் சொத்துக்களை பராமரிக்கமுடியவில்லை என்று 1,2 வாதிகள் தெரிவித்து ஏற்படுத்திகொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். என்ன எல்லாம் செய்யலாம் என்று

ஆவணத்தில் உள்ளது. அந்த ஆவணங்களில் பணம் பெற்றுக்கொண்டதாக குறிப்புகள் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. பொது அதிகார ஆவணத்தில் எந்த பிரதிபிரேயோஜனமும் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பொது அதிகார ஆவணத்தில் சொத்துக்களை பொறுத்து கணக்கு வழக்கு விவரங்கள் பொது அதிகார முகவர் ஒப்படைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

3. பொது அதிகார ஆவணத்தின் படி பொது அதிகார முகவர் பொது அதிகார ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்தால் அதன் விவரங்களை குறிப்பிட்டு 1,2 வாதிகளிடம் விற்பனை தொகையை செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி சொத்துக்களை 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தபோது விற்பனை தொகையை 2ம் பிரதிவாதி 1, 2 வாதியிடம் செலுத்தினாரா என்று 3ம் பிரதிவாதியிடம் நான் கேட்கவில்லை என்றால் சரி. அதற்குரிய ரசீதுகள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரி. நான் அதை பற்றி கேட்கவில்லை. 2ம் பிரதிவாதி 1, 2 வாதிகளுக்கு உறவினர்கள் இல்லை என்றால் 2ம் பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது. அதனால் 1,2 வாதிகள் 2ம் பிரதிவாதிக்கு எதற்காக பொது அதிகார ஆவணங்கள் ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

4. 2ம் பிரதிவாதி வாதிகளிடம் ஏமாற்றி பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தினரா என்றுஎனக்கு தெரியாது என்றால் சரி. நான் ஆவணங்களை சரிபார்த்து தான் கிரையம் பெற்றேன். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு எழுத்துபூர்வமான கருத்துறை வழக்கறிஞரிடம் பெற்றேனா என்றால் பெற்றேன். அந்த கருத்துறை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவா 1, 2 பட்டியலிட்ட சொத்துக்களின் எந்த திசையை நோக்கி அமைந்துள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். க.ச.எண்.386/1 கிழபுறமாகவும் க.ச.எண். 385/3 மேற்குபுறமாகவும் உள்ளது வேகுநாட்களாகிவிட்டதால்

ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்களை 1, 2 வாதிகள் கிரையம் பெற்றபிறகு ஒரு வீடு கட்டியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்றபோத வீடு இருந்ததா என்றால் ஓட்டு வீடு மின் இணைப்புடன் இருந்தது என்றால் ஆமாம். மின் இணைப்பு எண். என்ன என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் கிணறு, போர்வெல் உள்ளது என்றால் கிணறு உள்ளது. கிணறு எந்த புல எண்ணில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

5. தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கும், எனக்கு பிரச்சனை ஏற்பட்டு 17.02.2007 ம் தேதி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரி. அதன் முதல் தகவல் அறிக்கை பி.வா.சா.ஆ– 15 என்றால் சரி. அந்த குற்ற வழக்கில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டேன் என்றால் சரி. பல்லடம் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டேன். பல்லடம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.எண். 267/2007 25.02.2015 ம் தேதி குறுக்கு விசாரணையில் 17 வது வரியில் சமவம் நடந்தாக சொல்லப்பட்ட அன்று நான் போய் பார்த்தபோது அந்த தோட்டத்தில் தான் எதிரிகள் குடியிருந்தார்கள், எதிரிகள் நாய் வைத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளேன் என்றால் ஆமாம்.

6. அதே போல் குறுக்கு விசாரணையில் 23 வது வரியில் எனது முதல் விசாரணையில் எதிரிகளை நான் போய் பார்த்தபோது அந்த தோட்டத்தில் குடியிருந்தாகுவும், நீங்கள் யார் என்று விசாரித்தாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் ஆமாம். அதனால் தாவா தாக்கல் செய்தபோது 1, 2 வாதிகள் தான் தோட்டத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் தவறு. அதே போல் குறுக்கு விசாரணையில் 2 வது பக்கதில் 2 வது வரியில் நான் எனது முதல் விசாரணையில் தோட்டம் வாங்கி ஒரு வாரம் கழித்து தான் அந்த தோட்டத்தை பார்த்தபோது எதிரிகள் குடியிருந்தாக சொல்லியுள்ளேன் என்று

சொன்னால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்தில் 1, 2 வாதிகள் தான் சுவாதீன அனுபவத்தில் உள்ளார்கள் நானோ 3 ம் பிரதிவாதியோ தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுக்கவே இல்லை என்றால் தவறு. பல்லடம் குற்றவியியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அளித்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் 1, 2 வாதிகள் மேல்முறையீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

7. தாவா சொத்தை நான் கிரையம் பெறும் போது 3 ம் பிரதிவாதி பெயரில் சொத்து வரியோ கந்தாயமோ ஏற்படவில்லை என்றால் தவறு. எந்த தேதியில் 3 ம் பிரதிவாதியிடம் இருந்து சொத்துக்களை கிரையம் பெற்றேன் என்றால் 28.09.2006 ல் கிரையம் பெற்றேன். 2002 முதல் 2006 வரை முருகானந்தம் பெயரில் ஏற்பட்ட கந்தாரசீதுகள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. அதே போல் அந்த தேதியில் 3 ம் பிரதிவாதி பெயரில் பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். அந்த தேதியில் சொத்துவரி, மின்கட்டண ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 3 ம் பிரதிவாதி பெயரில் அடங்கல் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

8. 3 ம் பிரதிவாதி பெயரில் மின்கட்டணம், வீட்டுவரி, கந்தாயம் மாற்றம் ஏற்படவில்லை என்றால் தவறு. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் பார்த்தேன் என்றால் சரி. அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவா சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு முன்பு நிலஅளவையரை கொண்டு அளவீடு மேற்கொண்டு வரைபடம் பெற்றீர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை சுவாதீனத்தை நான் எடுக்கவில்லை , முருகானந்தமும் எடுக்கவில்லை. 1999 ம் ஆண்டிலிருந்து 1, 2 வாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் தவறு.

9. தாவா சொத்து பூமியில் அமைந்துள்ளது என்பதே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல மறந்துவிட்டது என்று சொல்லியுள்ளேன். தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று உரிமையில் நீதிமன்றத்தில் வாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண். 165/2016 ல் ஏற்பட்ட தீர்ப்பாணை என்றால் சரி. அது வா.சா.ஆ– 64 ஆகும். அந்த வழக்கு வழியுறுத்தப்படவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரி.

10. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் 1, 2 வாதிகளை அவிநாசிபாளையம் காவல்நிலைய அதிகாரிகள் கைது செய்தார்கள் என்றால் ஆமாம். அந்த கைதுக்கு பிறகு உரிமை மீறல் ஏற்பட்டதாக பல்லடம் துணை காவல் கண்காணிப்பாளர் மனுவின் அடிப்படையில் என்னையும், 1, 2 வாதிகளையும் விசாரணையை செய்தார் என்றால் ஞாபகம் இல்லை. அம்மாதிரி சம்பவம் நடந்தாகவே ஞாபகம் இல்லை. கடன் பெற்று தருவதாக 1, 2 வாதிகளிடம் முதல் பிரதிவாதி சொல்லி 2ம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் தவறு.

11. மகேஸ்வரன் என்பவர் எனக்கு தெரிந்த நபர் என்றால் இல்லை. அவர் சீட்டு நடத்தும் நபர், வாதிகளிடம் நம்பிக்கை ஏற்படுத்தி வாதிகளின் சொத்துக்கு கடன் வாங்கி தருவதாக சொல்லி பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தினார் என்றால் தவறு. அந்த பொது அதிகார ஆவணம் சொத்துக்களை விரிவு படுத்துவதற்காக 20 லட்சம் கடன்வாங்கி தருவதாக சொல்லி முதல் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தினார் என்றால் தவறு. ஏமாற்றப்பட்டது தெரிந்தவுடன் வா.சா.ஆ– 5 கடிதம் மூலம் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்வதாக 2ம் பிரதிவாதிக்கு தெரிவு படுத்தியுள்ளார்கள் என்றால் தவறு. அவ்வாறு தெரிவு படுத்தியதற்கான அத்தாட்சி தான் வா.சா.ஆ– 6 என்றால் தவறு. 14.02.2002 ம் தேதியில் இருந்து வாதிகளின் பொது

அதிகார முகவராக 2ம் பிரதிவாதி சண்முகம் இருக்க முடியாது என்றால் தவறு. அதனால் 3ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி 23.07.2002 ம் தேதி வா.சா.ஆ– 7 மற்றும் 8 கிரைய ஆவணங்களை ஏற்படுத்தியதே சட்டப்படி செல்லாது என்றால் தவறு. அந்த தேதியில் ஏற்பட்ட ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை செல்லாத ஆவணங்கள் என்றால் தவறு.

12. வா.சா.ஆ– 7, 8 ன் அடிப்படையில் 3ம் பிரதிவாதி என் பெயருக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் செல்லாது என்றால் தவறு. என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். எந்த கம்பெனியில் வேலை பார்க்கிறேன் என்றால் கம்பெனி பெயர் சொல்லமுடியாது. நான் வேலைகே செல்லவில்லை, அதனால் தான் சொல்லமுடியவில்லை என்றால் தவறு. 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாளிகள் என்றால் தவறு. 28.09.2006 ம் தேதியில் என்ன விலைக்கு தாவா சொத்துக்களை கிரையம் பெற்றேன் என்றால் இரண்டு கிரையமாக ஒரு சொத்து ரூ.2,38,500/– மற்றொரு சொத்து ரூ. 3,80,000/– க்கு கிரையம் பெற்றேன். 6 லட்சத்திற்கு மேல் செலுத்தியதாக சொல்லி கியைம் பெற்றீர்கள் என்றால் ஆமாம்.

13. கிரையம் பெற்ற தேதியில் என்னிடம் 6 லட்சம் கையிருப்பில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. தொகை இருந்தது அந்த வங்கி கணக்குகள் வேறு வங்கியில் கணக்குகள் வைத்துள்ளேன். கிரையம் பெற்ற தேதியில் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் பஞ்சாப் நேசனல் வங்கி பார்க் ரோடு கிளையில் வைத்துள்ளேன். அந்த சமயத்தில் எவ்வளவு தொகை வங்கி கணக்கில் இருந்து என்றால் எவ்வளவு என்று ஞ ஞாபகம் இல்லை. கையிருப்பில் இருந்தது. வங்கி கணக்கு எண் சொல்லமுடியுமா என்றால் முடியாது.

14. அந்த சமயத்தில் என்னிடம் வங்கி கணக்கே இல்லை என்றால் தவறு. தற்போது என்னுடைய வயது என்ன என்றால் 39. 2006 ம் வருடம் என்னுடைய வயது என்ன

என்றால் 19 லிருந்து 20 வயது இருக்கும். அந்த வயதில் நான் வேலைக்கு செல்லவில்லை 6 லட்சம் ரூபாய் என்னுடைய கையிருப்பில் இருப்பதற்கு வாய்பே இல்லை என்றால் தவறு. 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து என் பெயரில் தாவா சொத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் தவறு. என் மூலமாக தாவா சொத்து அக்கிரம சுவாதீன ஏற்படுத்தவேண்டி கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீனத்தில் நான் இடைஞ்சல் செய்வதாக அவிநாசி காவல் நிலையத்தில் 2007 ல் புகார் கொடுத்து விசாரணை செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

15. என் பெயரில் ஏற்பட்ட பொய்யான கிரைய ஆவணத்தின் அடிப்படையில் நான் 5ம் பிரதிவாதி வேல்முருகன் பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணமும் சட்டப்படி செல்லாது என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து 5ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் நிகல் வழக்கு கிரைய ஆவணம் அதனால் செல்லாது என்றால் தவறு. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் நான் உள்ளேன் என்றால் சரி. அவர்கள் என்னுடைய நிலத்தில் அத்துமீறி நுழைந்தார்கள். நான் தான் வாதிகளின் சொத்தை அத்துமீறி நுழைந்தேன் என்றால் தவறு. வாதிகைள் கோரியப்படி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.09 19:52:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.